**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 24/2015 P.W.9/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரமேஷ் கண்ணன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.02.025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் காணொலி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கருங்கல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல்நிலையக்குற்ற எண். 241/2014 சட்டப்பிரிவுகள் 392 இ.த.ச 1860 ன் படி பதிவுச் செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தேடிச்சென்றபோது 22.11.2014 ம் தேதி 19.00 மணிக்கு கருங்கல் மூசாரி பஸ் டாப்பில் வைத்து மேற்படி இடத்தில் நின்றுக்கொண்டிருந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த அருணாச்சலம், துரை மற்றும் பிரபு ஆகியோர்களை பிடித்து விசாரணைச் செய்த போது அவர்களில் அருணாச்சலம் என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

2. மேலும், அவர் இதுபோன்று குற்ற சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் ஒப்புக்கொண்டார். குற்ற எண் 564/2014, சட்டப்பிரிவுகள் 457, 380 இ.த.ச 1860 வழக்கிலும் குற்ற எண் 583/2014, சட்டப்பிரிவுகள் 457, 380, உ/இ. 511 இ.த.ச 1860 வழக்கிலும் தொடர்புடையதாக ஒப்புக்கொண்டார். குற்ற எண் 564/2014 வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 22.11.2014 ம் தேதி 19.00 மணிக்கு கைதுச் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான ராஜேஷ், ஜெனிஷ்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கோபிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன்.

3. சாட்சி 1 ஆல்பிரட் என்பவரை மறுவிசாரணைச் செய்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மற்ற சாட்சிகளை விசாரணை செய்தபோது அவர்கள் முன்பு விசாரணை செய்த விசாரணை அதிகாரியிடம் கூறியது போல் என்னிடமும் கூறியதால் நான் புதியதாக வாக்குமூலம் பதிவுச்செய்யவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் பணத்தை எடுத்ததாக ஒப்புக்கொண்டு அந்த பணத்தை செலவழித்துவிட்டதாகவும் கூறினார். எனது விசாரணையிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.